www.padippakam.com


# ஈழ தேசம்

மலர் - 1 டிசம்பர் 1995 இதழ் 4


# யாழ்ப்பாணம் பாலைவனமாகிறது

இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி உள்ளது. கைப்பற்றப்படும் பிரதேசத்தில் உள்ள தமிழர் வீடுகள் இராணுவத்தினரால் நன்கு பாதுகாக்கப்படுவதாக இலங்கை அரசு பொய்யான அறிக்கைகளை வெளியிடுகின்றன. அனுரத்த ரத்வத்தையின் அறிக்கைப்படி சில வீடுகளை திறந்த பொழுது அதனுள் இருந்து குண்டுகள் வெடித்ததாய் கூறுகிறது.

அது சரி, மூடி இருந்த வீடுகளை இவர்கள் எதற்காக திறந்தார்கள்? உண்மையில் இன்று யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது.

இலங்கை இராணுவத்தினர் முன்னேறி வரும்பொழுது பூட்டியுள்ள தமிழர்களின் வீடுகளை தமக்கு சொந்தம் என்று தனித்தனியே ஒரு போர்ட்டில் எழுதி வைத்து விட்டு செல்கிறார்கள். பின் வரும் பிரிவினர் அந்த வீட்டை கொள்ளை அடிக்காமல் இருப்பதற்கு அவர்களுக்குள் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம். பின் அப்பிரதேசம் கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் அவ்வீடுகளில் உள்ள பொருட்களை கொள்ளையடித்து அவர்களுக்குள் பங்கிட்டுக் கொள்கின்றனர். நீர்வேலி வாழைக்குலை மற்றும் பயிர்கள் கூட இவ்விதம் கொள்ளையடிக்கப்படுகிறது.

சிங்கள இராணுவம் மட்டுமல்ல புலிகள் கூட வெளியேறும் பொழுது மக்களிடமிருந்து பாதுகாப்பு நிதியன கணிசமான தொகையை அறவிட்டும் பூட்டியிருக்கும் வீடுகளில் அவர்களின் பங்குக்கும் கொள்ளையடித்து செல்கின்றனர்.

இராணுவம் கொள்ளையிட்ட பின் தமிழர் வீடுகளை புல்டோசர்கள் கொண்டு நீர்மூலமாக்கப்பட்டு வருகிறது.

ஈழத் தமிழர் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சம்பாதித்தவை யாவும் இப்படி இஷ்டம் போல சிங்கள இராணுவத்தினராலும் புலிகளாலும் திருடப்படுகின்றன. கைப்பற்றப்பட்ட பகுதியில் சேதப்படுத்தப்படாத வீடுகளே இல்லை என்பதுதான் உண்மை.

இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாணத்தில் அரசியல் வேலை செய்வதற்காக தமிழர் விடுதலை கூட்டணியை தவிர்த்து ஏனைய தமிழ் கட்சிகளான பிளாட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி.ரெலோ ஆகியவை முனைப்புடன் முனைந்து வருகின்றன. இதுதொடர்பாக எதிர்வரும் 11ம் திகதி மேற்கொண்ட குழுவினர் சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கின்றனர்.

# ஈழத்தமிழர்கள் ஊர்வலம்

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி கடந்த 18.11.95 சனிக்கிழமை அன்று காலை 11 மணிக்கு பனகல் பூங்கா (தி.நகர்)விலிருந்து கவர்னர் மாளிகைக்கு அமைதியான முறையில் ஊர்வலமாகச் சென்று மகஜர் ஒன்றினை மேன்மை பொருந்திய ஆளுநர் திரு. சென்னா ரெட்டி அவர்களிடம் பி.ப. 1 மணிக்கு கையளித்தனர். இந்த ஊர்வலத்தில் தமிழகத்தின் பல முகாம்களிலிருந்தும் முகாமிற்கு வெளியே தங்கி உள்ள ஈழத் தமிழர்களும் தமிழகத்தைச் சேர்ந்த நண்பர்களும் ஆயிரக்கணக்காக் திரண்டு வந்து கலந்து கொண்டனர். ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி ஊர்வலத்துக்கான அழைப்பில் பிரசுரத்தில் கூறப்பட்டிருந்ததாவது:

ஈழத்தமிழ் மக்களை அழித்தொழிக்கும் சந்திரிகாவின் யுத்தத்தினை முறியடிக்க நாம் ஒன்றுபட வேண்டும். இன்று நடக்கும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதாகக் கருதி ஒட்டுமொத்த ஆதரவினையும் சந்திரிகாவுக்கு வழங்கி வருகிறார்கள், சிங்கள மக்களும், அனைத்து படைப்பிரிவுகளும். மேலதிகமாக கொழும்பில் இருந்து அரசியல் வியாபாரம் நடத்தும் தமிழ் கட்சிகளும் சந்திரிகாவுக்கே தங்களின் ஆதரவை நல்கி வருகின்றனர். உலக நாடுகளும் தமிழின அழிப்பு நடவடிக்கையை கண்டிக்காதது சந்திரிகாவின் அழிப்பு நடவடிக்கைக்கு சாதகமாகவே உள்ளது.

எங்கள் இனம் ஈழத்தின் எஞ்சிய பகுதிகளில் அகதிகளாக தஞ்சம் புக இடமின்றி அல்லல் படுகின்றனர். கொட்டும் மழையிலும் ஒதுங்க இடமின்றியும் தெருவோரம் குழந்தைகள் பிறக்கும் அவலச் செய்திகள் நம்மை எட்டுகிறது. போக்கிடமின்றி அவதிப்படும் மக்களுக்கு உணவோ மருந்துகளோ எடுத்துச் செல்ல சந்திரிகா அரசு தடுத்து வருகிறது. இதனால் பட்டினியால் வாடும் நிலைமையும், நோயினால் மரணமடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த உண்மைகளை பகிரங்கமாக சொன்னதற்காக தமிழரான யாழ்ப்பாண அரசாங்க அதிபரை சந்திரிகா அரசு பதவி நீக்கம் செய்ததோடு அல்லாமல் தமிழரையும் மிரட்டியுள்ளது மேலும் நவீன துட்டகைமுனுவான சந்திரிகா மக்களின் மீது நடத்தி வரும் இனவாத கொடுமைகளை வெளியுலகுக்கு தெரியாத வண்ணம் செய்தித் தணிக்கையை அமல்படுத்தி மூடி மறைத்து வருகிறார்.

அனைத்துச் சூழலும் ஈழத் தமிழினத்திற்கு எதிராக உருவானதற்கான காரணங்களை ஆராயும் நேரம் இதுவல்ல. யாழ்ப்பாணம் சிங்கள வெறியர்களின் பிடியில் சிக்குண்டுவிட்டது. ஈழத் தமிழினத்தின் எஞ்சிய பாரம்பரிய பிரதேசம் பறிபோவதையாவது நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

இன்றைய நிலையில் இந்தியா மட்டுமே நேரடியாகத் தலையிட்டு ஈழத் தமிழரைக் காப்பாற்ற முடியும். ஆகவே நாம் ஓரணியில் திரண்டு ஈழத் தமிழருக்காக இந்திய அரசை தலையிட வற்புறுத்த வேண்டும். ஈழத் தமிழர்களாகிய நாம் ஒன்றுபட்ட குர்லினை ஓங்கி ஒலிக்கும் தருணம் இது தான். ஈழத் தமிழரின் பக்கம் இருக்கும் நியாயங்களை இந்திய அரசுக்கும் உலகுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.




**ஈழ மக்களின் இதயக் குரல்**

படிப்பகம்

www.padippakam.com



# அகதிகள் பக்கம்

## இனியும் மௌனம் வேண்டாம்

பா. இராஜரத்தினம்



சிங்கள பேரினவாத ஒடுக்கு முறை முன் எப்போதும் இல்லாத அளவு மிகவும் கொடூரமான முறையில் இப்போது நடைப்பெறுகின்றது. சிங்கள ராணுவத்தின் தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் புலிகள் பின் வாங்குகின்றனர். முன்பு புலிகளின் அனுமதியின்றி யாழ். குடா நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப் படாத மக்கள், இன்று கெடு வைத்து வெளியேற்றப் படுவதோடு பாதுகாப்பு நிதிக்கென வெளியேறும் மக்களிடமிருந்து பணம் பறிக்கிறது புலிகள் இயக்கம். முன்னேறி வரும் சிங்கள இராணுவம் தமிழ் மக்களை தயவு தாட்சண்யமின்றி கொன்று குவித்து வருகிறது. அத்தோடு கட்டிடங்களை மட்டுமல்ல, தென்னை, பனை, மா, பலா போன்ற பயன்மிக்க மரங்களைக்கூட புல்டோசர் கொண்டு தரை மட்டமாக்கி வருகின்றன. இனி மக்கள் தங்களின் சொந்தப் பிரசேதங்களுக்கு திரும்பி பழைய நிலைக்கு வருவதற்கு 20 வருடங்களாகும்.

தங்களின் உயிரை காத்துக் கொள்வதற்கு தமிழ் மக்கள் யாழ் குடா நாட்டை விட்டு சாரி சாரியாக வெளியேறுகின்றனர். துவிச்சக்கர வண்டியைத் (சயிக்கிள்) தவிர வேறு வாகனங்கள் இல்லாததால் மாற்று உடைகளை மட்டும் சுமந்து கொண்டு ஏனைய உடமைகளை வேறுவழியின்றி இராணுவத்தின் அழிப்பிற்கு விட்டுவிட்டு பல கிலோ மீட்டர்களை இரவு பகலென பாராமல் கால் நடையாகவே சாவக்ச்சேரி, கிளிநொச்சி, முல்லைத் தீவு போன்ற இடங்களுக்கு சென்று தஞ்சம் அடைந்துள்ளனர். மழைக்காலமாததால் பல சிரமங்களுக்கிடையில் பயணத்தை மேற்கொள்கின்றனர். மேலும் இவர்கள் தஞ்சமடைந்துள்ள பிரதேசம் விவசாய பூமியாகும். இதனால் ஒதுக்குவதற்கு கட்டிடங்களோ அல்லது கூடாரம் அமைத்துக் கொள்வதற்கு வசதியோ அற்ற நிலையில் வானத்தையே கூரையாகக் கொண்டு அல்லல்படுகின்றனர்.

கிட்டத்தட்ட 5 இலட்சம் மக்கள் யாழ் குடாநாட்டை விட்டு வெளியேறி, சொந்த மண்ணிலேயே அகதிகளாகக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உணவோ மருத்துவ வசதியோயற்ற நிலையில் உள்ளனர். சென்ற வாரம் சாவகச்சேரி தெருவோரமாக 10 குழந்தைகள் பிறந்துள்ளன.

இந்த அகதிகளுக்காக உணவுகளை பருத்தித்துறைக்கு அனுப்பி உள்ளதாக சிங்கள அரசு அறிவித்திருப்பது உலகை ஏமாற்றும் தந்திரமாகும். பருத்தித்துறைக்கு அனுப்பப்படும் பொருட்கள் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு போய்ச்சேர வழி இல்லை. தமிழ் மக்கள் மீது அரசுக்கு உண்மையான அக்கரை இருந்தால் வவுனியா வழியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிக்கு அத்தியாவசிய பொருட்களை அனுப்பலாம். ஆனால் சந்திரிகா அரசு அனுப்ப மறுத்து வருகிறது. அகதிக்ளை கவனிப்பதற்கு தொண்டு நிறுவனங்களுக்கும் சிங்கள அரசு அனுமதி மறுத்துள்ளது. இதனால் நல் உள்ளங்கள் வழங்கும் உதவிகள் கூட அவதிப்படும் இம்மக்களுக்கு போய்ச்சேர வழியில்லை. அனாதரவாக நிற்கும் இம் மக்களுக்கு உதவிட மனிதாபிமானத்தோடு இந்தியா உட்பட உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஈழம் வேண்டுமா?

புலவர் கண்ணன்

எம் உரிமை நாடு கேட்க
எமக்குள் என்ன பிளவு - அது
எதிரி யார்க்கு எளிது
கண் இமையாய் சேர்ந்திருந்தால்
களம்புகுதல் பற்றி - ஒரு
கவலை இல்லை வெற்றி
சேர்வோமே இது காலம்
சேர்ந்தாலே தமிழ் ஈழம்!

எத்தனையோ பரம்பரையாய்
எமது இனம் ஆண்டிருக்க
இப்பொழுது நாடெமக்கு இல்லையே!
ஒத்துரிமை கேட்பதற்கு
உடன்பிறப்பாம் தமிழரினம்
ஒன்றுபடும் எண்ணமின்னும் வல்லையே!
உதிர்ந்திருந்தால் நமக்குவரும் தொல்லையே!
சேர்வோமே இது காலம்
சேர்ந்தாலே தமிழ் ஈழம்!

சீருமில்லை சிறப்புமில்லை
வேறுநபர் துணையுமில்லை
ஊர்பிரிந்து உலகம் சென்றோம் சுற்றியே
கோரிக்கையில் மாற்றமில்லை
குழப்பங்களே நம்மில் இல்லை
ஓரணியாய் இன்றுகரம் பற்றியே



போர்முனையில் நாம் இணைந்தால் வெற்றியே
சேர்வோமே இது காலம்
சேர்ந்தாலே தமிழ் ஈழம்!

சொந்தஇடம் நிலைக்கவில்லை
வந்தஇடம் நிலையுமில்லை
எந்தவிதம் வாழ்வது நாம்? தோழனே!
இந்தநிலை மாண்டிடனும்
ஈழமண்ணை ஆண்டிடனும்
அந்திபகல் கூடிடுவோம் தோழனே!
சிந்தனையை கூறிடுவோம் தோழனே!
சேர்வோமே இது காலம்!
சேர்ந்தாலே தமிழ் ஈழம்!

## அகதிகள் உண்ணாவிரதம்

இலங்கையில் சந்திரிகா அரசு தமிழீழ மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலைக் கண்டித்தும் இனப் பிரச்சனையில் இந்தியாவை தலையிடக் கோரியும் தமிழகத்திலுள்ள இலங்கை தமிழ் அகதிகள் உண்ணா விரதம் இருந்து தங்களது கோரிக்கைகளை மகஜர் மூலம் அரசுக்கு கையளித்துள்ளார்கள்.

கரூர் அகதிகள் முகாமிலும் முட்டுக்காடு அகதிகள் முகாமிலும் 9-11-95 அன்று கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாமிலும் 6-11-95 அன்று கோவளம் அகதிகள் முகாமிலும் இன்னும் சில அகதிகள் முகாங்களிலும் மக்கள் தங்களது உணர்வுகளை இப்போராட்டங்கள் மூலம் வெளிப் படுத்தியுள்ளனர்.

கீழ்புதுப்பட்டு அகதி முகாமின் அகதிகள் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கு தடை விதித்துள்ளார் இப்பகுதியின் காவல் துறையின் கண்காணிப்பாளர். இந்தியாவை நம்பி வந்துள்ள ஈழத் தமிழ் மக்கள் தங்களின் உணர்வுகளை இந்திய அரசுக்கு தெரிவிப்பதற்கு அனுமதி மறுத்திருப்பது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். இது மிகவும் வேதனைக்குரியதாகும்.

ஈழத்துக்காக போராடும் அனைத்து சக்திகளும் ஒரு குடையின் கீழ் அணி திரள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# அங்கும் இங்கும்

## நக்கினார் நாவிழந்தார்!

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் WORLD WIDE TELEVISION என்ற வெளிநாட்டுத் தொலைக்காட்சியின் நிருபருக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''யாழ்ப்பாணக்குடா நாட்டில் சண்டையில் ஈடுபட்டு வரும் இலங்கை இராணுவத்தினர் நன்றாக நடந்து வருவதாக அறிந்தோம். அவர்களைப் பற்றி எங்களுக்கு எந்தவிதமான முறைப்பாடு ஒன்றுகூட வரவில்லை''.

## தமிழரை ஒடுக் ..

இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு பாதுகாப்புக்காக இலங்கை அரசு வரவு செலவுத் திட்டத்தில் 3800 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்தப் பணம் தமிழரை ஒடுக்குவதற்காகவே சந்திரிகாவால் செலவிடப்படுகிறது.

## சென்னை காவல் துறைக்கு நன்றி

18-11-95 அன்று ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி ஒழுங்கு செய்திருந்த ஊர்வலத்தில் ஈழத் தமிழ் மக்கள் கலந்து கொள்ள மத்திய மாநில அரசுகள் அனுமதி அளித்திருந்தது. ஈழத் தமிழ் மக்களை இந்தியா கைவிடவில்லை என்ற நம்பிக்கை வலுவடைந்துள்ளது. தமிழக மக்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டது ஈழத் தமிழ் மக்களுக்கு தமிழகம் என்றும் பக்க பலமாக இருக்கும் என்ற தெம்பைத் தருகிறது. ஊர்வலத்துக்கு அனுமதி அளித்ததோடு, அது சிறப்பாக நடைபெறுவதற்கு சகல வழிகளிலும் கடமை உணர்வோடு ஆதரவும் ஒத்துழைப்பும் தந்து உதவிய சென்னை காவல் துறையினருக்கு ஈழத் தமிழ் மக்கள் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டவர்களாவர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. ராஜிவ் காந்தியை புலிகள் படுகொலை செய்ததினால் ஈழத் தமிழ் மக்கள் மீது வெறுப்புற்றிருந்த இந்திய மக்கள் இன்று ஈழத் தமிழ் மக்களும் புலிகளின் கொள்கையும் ஒன்றல்ல என்று உணர்ந்திருப்பது நிம்மதியை தருகின்றது. புலிகளின் நடவடிக்கைகளினால் இழந்த ஆதரவை ஈழத் தமிழ் மக்கள் மீண்டும் பெற்று வருவது புதிய நம்பிக்கையை தருகிறது.

## உண்மைக்கு புறம்பான செய்தி


17-23 லண்டன் ஈழநாடு தலைப்புச் செய்தியில் ''சந்திரிகாவைக் காக்க இந்தியப் படை வந்தது'' அதே பகுதியில் ''காயமடைந்த இலங்கை இராணுவத்தினர் இந்தியா அனுப்பப்படுகின்றனர், கொழும்பு ஆஸ்பத்திரிகள் நிரம்பி விட்டனவாம்.''


மேற்கண்ட செய்திகள் ஓர் வதந்திச் செய்திகள் கூட அல்ல இப்படியிருக்க ஈழத் தமிழர்களுக்கு ஏன் இப்படி தவறான செய்தியினை இப்பத்திரிகை வழங்குகிறது. நோக்கம் என்ன?

## எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

### தோழர் ஆதவன்

மறைவு: 20/12/1987





அடக்கு முறை விலங்கொடிக்க
ஆர்ப்பரித்த ஆதவனாய்
தமிழினத்தின் துயர் துடைக்க,
தன்னையே அர்ப்பணித்து
ஆதவன் மாஸ்டர் என
அழைத்து நாம் ஆதரிக்க
அமர்ந்து விட்டார் என்றும்
ஈழ மக்கள் இதயம் தன்னில்,

நின் வீரச் செயல்கௗெல்லாம்
பட்டியலில் போர்வையாகும்
அழைப்பு மணியில் வெடிகுண்டை
அருமையாய் தான் பொருத்தி
வவுனியா பொலிஸ் துஷ்டன்ரை
வீழ்த்தி எம்மவரை காக்க செய்து
சாகச செயல் புரிந்து
சரித்திரம் நீ படைத்தாய்,

புளொட் என்ற இயக்கத்தின்
செயற் குழு உறுப்பினராய் (அங்கு)
அராஜகத்தை எதிர்த்து நின்றாய்
அதிலேயும் தோல்வி கண்டாய்
பிடிக்க வில்லை அவர் கொள்கை
பிரிந்து வந்தாய் ஈ.என்.டி.எல்.எப் ல்
இம் முற் போக்கு முன்னணியின்
துணைப் பொதுச் செயலரானாய்,

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில்
போராளிக்ளை ஒன்றாக்க
உரிமையுடன் உழைத்து நின்றாய்
உயிரை அதால் பலி கொடுத்தாய்
உமை அழிக்க சிங்களப் படை
தோல்வியை தான் தழுவ
பேச்சுவார்த்தை சூழ்ச்சியிலே
கொடிய மாணிக்கதாசனவன்
திசெம்பர் 20ம் நாள்
கோரமாய் கொன்றொழித்தான்,

நீ சாகவில்லை தோழா (தமிழா)
எம் நெஞ்சிலே நீ அமர்ந்து
தமிழினத்தின் விடுதலையை
தரமாக்கும் உம் மரணம்
உம் பூவுடலைப் புதைத்த - அந்த
செம் மண் புதை குழியில்
பூத்துக் குலுங்கிடுமே
பல கோடிப் புரட்சிப் பூக்கள்.


## ஆசிரியர்கள் தேவை

### இந்திரா காந்தி இண்டர்நேசனல் அக்காடமி (IGIA)


(Residential School)

பெங்களூர்

ஈழத் தமிழ் மாணவர்களுக்காக மட்டுமே நடாத்தப்படும் மேற்கண்ட பாடசாலைக்கு ஆசிரியர்கள் (ஆண் - பெண்) தேவை. பெங்களூரில் இருக்கும் இந்தப் பாடசாலையில் படிப்பிடிக்க ஆசிரியர்களுக்குத் தங்கும் வசதி செய்து தரப்படும். குடும்பமாய் இருப்பவர்களுக்கு குவாட்டஸ் வழங்கப்படும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

தாளாளர் Correspondant IGIA
6/7, பூர்ணிமா அப்பார்ட்மெண்ட்,
2வது பிரதான வீதி,
யுனைட்டெட் இந்தியா காலனி,
சென்னை-600 024.

## சித்திரக்கூத்தர்

பல குற்றச் செயல்களுக்காக தமிழ் நாட்டில் தேடப்பட்டு இலங்கைக்கு தப்பிச் சென்ற நந்தனமானவரை சிங்கள அரசு தத்தெடுத்து மக்கள் வாக்கு பெறாமலே M.P. ஆக்கி போட்டினம். சிங்கள அரசின் வாரிசாகியதால் பல கோடிக்கு அதிபதியாகி கொழும்பில் அடாவடித்தனத்துக்கு பேர் போன இவர், வடக்கு கிழக்கு மாகாண சபையின் அடுத்த முதல்வர் நான்தான் என்று பிதற்றித் திரியறது ரொம்ப பேராசை பாருங்கோ. இவர் முன்னர் இருந்த குட்டையிலிருக்கும் பிரேமமான மட்டையும் போட்டிக்கு வந்துள்ளதாம். இதனால் இரு வளர்ப்பு பிள்ளைகளில் யாருக்கு பட்டம் கட்டுவது என்று உன்னத அம்மையார் திண்டாடுகிறாராம். ஈழத் தமிழ் மக்களின் அழிவையோ அரசியல் அதிகாரத்தைப் பற்றியோ கவலைப்படாமல் பதவிக்காக போட்டி போடும் இவர்கள் அல்லவோ மக்கள் தலைவர்கள்.

ஈழத் தமிழருக்காக ஒரே தலைமையை உருவாக்க ஈழத் தமிழ் மக்கள் முன் வரவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# உன் அடிச் சுவட்டில் நானும்



ட்ராயின் பக்கம் திரும்பிச் சொன்னான்: "நீ ஏன் சன்னல் வழியாகக் குதித்தாய். நான் அரசாங்கக் கொள்கையை விளக்கத்தான் தொடங்கினேன். அரசாங்கத்தின் கொள்கையை ஒருமுறை புரிந்துகொண்டு வியத்காங்குகளிடமிருந்து விலகிவிட்டால் நீ மீண்டும் உன் குடும்பத்திற்கே திரும்ப அனுமதிக்கப்படுவாய்.

அதைப்பற்றி நினைக்கையிலேயே உனக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லையா? ஆனால் நான் அதைச் சொல்லத் தொடங்குமுன் நீ...."

ட்ராய் பொறுமை இழந்து இடைமறித்தார். 'உன்னுடைய அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்குவதற்காக உன்னுடைய ஆவியை ஏன் வீணடித்துக் கொள்கிறாய்.'

போலீஸ் அதிகாரி தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டுதேன் சொட்டும் வகையில் பேசினார்; "இந்த நடவடிக்கையில் நீதான் பிரதானமான குற்றவாளி அல்ல என்று எனக்குத் தெரியும். அது வேறு யாராவது இருக்கும்."

ட்ராயை தலையை அசைத்து மறுத்தார். "குற்றவாளி என்ற பேச்சுக்கே இடமில்லை; அது ஒரு குற்றமே கிடையாது. அமெரிக்க ஆக்கிரமிப்பாளரைக் கொல்வது நாட்டுக்குச் செய்யும் சேவையே தவிர குற்றமில்லையே! அதை நானேதான் செய்தேன், வேறு எவரும் செய்யவில்லை.மக்நமாராவைக் கொல்லவேண்டும் என்று நானேதான் திட்டமிட்டேன்."

போலீஸ் அதிகாரி இன்னும் பொறுமையாக அவரை எப்படியும் தன் பக்கம் இழுத்துக்கொள்வதில் வெற்றி பெற முயற்சி செய்தார்.

"மீண்டும் நன்றாக யோசித்துப் பார். நீ செய்தது மிகப்பெரிய குற்றம் என்பதை நீ அறியவில்லையா? ஒரு உயர்மட்ட அமெரிக்கரின் உயிருக்கு வேட்டு வைக்க நினைத்தது எவ்வளவு பெரிய குற்றம்?"

"அவன் ஒரு அமெரிக்க ஏகாதிபத்தியப் பன்றி என்பதை நான் அறிந்திருந்ததால்தான் என் உயிரே போனாலும் சரி என்று அவனைக் கொல்ல முயன்றேன்."

படுக்கையைச் சுற்றிலும் நின்றுகொண்டிருந்த போலீசார் ஒருவருக்கொருவர் பொருள் பொதிந்த பார்வையைப் பரிமாறிக் கொண்டிருந்தாலும் அதிகாரி மிக அமைதியாக, "உன்னுடைய அழகான, இளமை ததும்பும் மனைவியை நினைத்துப் பார். அவளுக்காகவாவது இரக்கப்படு. சில நாட்களுக்கு முன்புதான் அவளை மணம் முடித்திருக்கிறாய். அவளுடைய வாழ்க்கையையே நாசம் செய்துவிடாதே!"

"நான் கைது செய்யப்பட்டதிலிருந்து இன்றுவரை நாங்கள் எவ்வாறு, எப்பொழுது திருமணம் செய்துகொண்டோம் என்பதைத்தான் விடாமல் சங்கு ஊதிக்கொண்டிருக்கிறீர்களே; எங்கள் திருமணப் புகைப்படத்தை என் முகத்திற்கு நேராகத் திணித்து, காதலையும், மகிழ்ச்சியையும் சுகத்தையும்பற்றி நீண்ட பிரசங்கங்கள் செய்திருக்கிறீர்கள். என்னுடைய மனைவியின் உருவம் என்னுடைய நாட்டையும் மறக்கச் செய்துவிடும் என்று மனப்பால் குடித்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த மண்ணில் அமெரிக்க வெறியர்கள் இருக்கும்வரை எந்த மனிதனுக்கும் சந்தோஷம் கிடையாது".

ட்ராயினுடைய இந்த உறுதியான போக்கை பொருட்படுத்தாதைப் போல காட்டிக்கொண்ட போலீஸ் அதிகாரி மீண்டும் தொடங்கினான்:

"நேற்று உனக்குப் பொழுது போவதற்காக ஒரு 'டேப்ரிக்கார்டர்' கொண்டுவந்து கொடுத்தேன். அதில் வடவியத்நாமிலிருந்து தப்பித்து, 17 வது அட்சரேகையை கடந்து தெற்கே வந்திருக்கிற ஒரு மாணவன் கூறிய கதை இருந்தது. ஒரு 'கம்யூனிஸ்ட் இரும்புத் திரை'க்குப் பின்னால் தான் பெற்ற அனுபவங்களைக் கூற, அங்கிருந்து தப்பி வந்து சேருகிறவர்களைப் பார்பதோ, அல்லது அவர்கல் கூறுவதைக் கேட்பதோ. மிக அரிது. ஆனால் அரசாங்கத்தின் தாராள மனப்பான்மையை உணர்ந்துகொள்ள நீ மறுக்கிறாய், அந்த 'டேப் ரிக்கார்டரைக் கூட உடைத்தெறியத் துணிந்துவிட்டாய். எல்லைமீறி நீ சென்றுவிட்டாய் எவ்விதமான மனிதத்தன்மை நிறைந்த எந்தக் கொள்கையும் உனக்குப் பயன்படுத்த முடியாது".

"அந்த அவலட்சணம் பிடித்த மாணவன் மட்டும் என் முன்னால் இருந்தால், நிச்சயமாக அந்த டேப் ரிக்கரார்டரை உடைத்திருக்க மாட்டேன். அவனுடைய மண்டையை பிளந்திருப்பேன். அவன் வட வியத்நாமைமட்டும் அவதூறு செய்யவில்லை. தலைவர் ஹோசிமின்னையும் அவதூறு பேசத்துணிந்துவிட்டானே. அவனுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்.

"டராய் ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தமாகவும் உரக்கவுமே பேசினார். படுக்கையில் கிடந்தவாறு மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கினார். அவரது முகமே கோபத்தினால் சிவந்துவிட்டது.

இன்னும் என்னவேல்லாமோ சொல்ல விரும்புகிறார் என்பது தெரிந்தது. போலீஸ் அதிகாரி எப்படியோ அமைதியாக இருந்தார். பிறகு "நான் வேறு ஒரு நாளைக்கு வருகிறேன்." என்று கூறிவிட்டு என்னை நோக்கி, "நீயும்கூடப் புறப்படுகிறாய், நேரம் ஆகிவிட்டது" என்றான்.

நான் அவசர அவசரமாக ஆரஞ்சுப் பழத்தை உரித்து ஒரு பாதியை அவருடைய கையில் கொடுத்துவிட்டு மீதியை அவரைத் தின்னும்படி கூறினேன். அவரது காதுக்கருகே குனிந்து, "நீங்கள் எங்கெல்லாம் போகிறீர்களோ அங்கெல்லாம் நானும் தொடர்ந்து வருவேன். எந்த நேரமும் உங்களை வேறு இடத்திற்கு கொண்டு செல்லலாம், குடும்பத்திற்கு மட்டும் அது தெரியவேண்டும்" என்று ரகசியமாகக் கூறி விடை பெற்றேன்.

பொதுப் போலீஸ் இலாகாவின் கீழிருந்த வேறு ஒரு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு விட்டேன், என்னுடன் பத்து பேர் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் இருவர் என்னுடை வயதை ஒத்தவர்கள். அவர்களில் ஒருத்தி 'ஏ' பள்ளி மாணவி. அமெரிக்க எதிர்ப்பு 'போர்டுகளை' கட்டிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவள். மற்றொருத்தி 'ஓய்' வியாபார நிருவனத்தில் பணியாற்றியவள். இந்தப் பெண் மிகக் காட்டுமிராண்டித்தனமாக கொடுமைப்படுத்தப்பட்டாள். அவள் வேலை செய்துவரும் நிறுவனத்தில் தேசிய விடுதலை முன்னணியின் கொடிகளும், சில தஸ்தாவேஜுகளும் இருந்ததுதான் காரணமாம். இன்று காலையில் கூட, விசாரணை அறையிலிருந்து நடக்க முடியாமல் சுவரைப் பிடித்துக் கொண்டே நடந்து வந்தாள். நகக் கண்களுக்குள் ஊசி ஏற்றி விரல்களிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. அறைக்குள் தள்ளாடி நுழைந்தவுடனே தன் சிநேகிதியின் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு குமுறிக் குமுறி அழுதாள். எவ்வளவு தேற்றியும் சமாதானம் அடையவில்லை.

"என்னை அழவிடுங்கள். இங்கேதான் என்னால் அழமுடியும். என் சிநேகிதிகளுக்கு முன்புதான் நானும் அழுவேன். எதிரிகளுக்கு முன்பு என்றும் அழுததில்லை. அழவும் மாட்டேன். ஆனால் எவ்வளவு உறுதியுள்ளவள் என்பதையே காட்டியிருக்கிறேன். நான் இந்தச் சிறைக்கு வந்து இரண்டு நாட்களாகியும், இதுவரை யாரையும் சிநேகம் செய்து கொள்ளவில்லை. ஏனைய கைதி

கடந்த 60 ஆண்டு காலமாக ஏமாற்றப்பட்டு வந்த தமிழினத்தை மீண்டும் ஏமாற்ற பேரினவாத அரசுக்கு துணை போகும் தமிழ்த் துரோக கட்சிகளை தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடிப்போம்.

www.padippakam.com



கள் அனைவரும் என்னை சந்தேகக் கண்கொண்டு, வெறுப்பாகவே நோக்குவார்கள்."

அன்று மாலை உணவுக்குப் பிறகு, எங்கள் சிறைக்குள், ஒரு பாடல் ஓசை மெல்ல வெளிவந்தது. ஒரு பெண் ஓரடியைப் பாடியவுடன், மற்ற பெண்கள் அதனைக் கோஷ்டியாக, மிக மெல்லிய குரலில் பாடினார்கள். 'ஓய்'யும் பாடினாள். அவள் அனுபவித்திருக்கும் சித்திரவதைக்கும், முகம், உடல் ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் ரத்தக் காயங்களுக்கும், அவள் அழ முடியுமே தவிர பாடுவாள் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவளோ சிறையின் கம்பிக் கதவுகளின்மீது சாய்ந்து உட்கார்ந்து எங்களை நோக்கியவண்ணம், அமைதி தவழும் முகத்துடன் மெல்லப் பாடவே செய்தாள்; பலமாகக் கட்டுப் போடப்பட்டிருந்த அவளது கைகள் மேலும் கீழும் ஆடி அசைந்தன. அவை தாளத்திற்காக அசைந்தன. சிறிது நேரம் கழித்து என்னைப் பார்த்தாள். அழுது அழுது சிவந்திருந்த எனது கண்களைப் பார்த்து, மிக ஆதரவாக 'கோஷ்டியாகப் பாடுவது மிக அருமையானது. நீ ஏன் கவலையோடு காட்சியளிக்கிறாய் அழுவதை நிறுத்திவிடு. எங்களோடு சேரிந்து பாடு' என்றாள்.

வெளியே காவலாளிகளைக் கண்காணித்துக் கொள்ள ஒவ்வொருவராக மாறி மாறிப் பொறுப்பேற்றுக் கொண்டனர். காவலாளிகள் வரும்போதெல்லாம் பாடுவதை எல்லோரும் நிறுத்திவிட்டு, பேசிக் கொண்டிருப்பதைப் போல பாவனை செய்வோம். நாங்கள் பாடிய பாட்டு சற்று நீளமானதுதான். வடவியத்நாமிலிருந்த ஒரு பெரிய சங்கீதக்காரர் எழுதி, மெட்டமைத்த பாடல் அது. "நம்பிக்கையின் கீதம்" எனபது அந்தப் பாடலுக்குப் பெயர்.

அதற்கு மேலும் அங்கே நான் அழுது கொண்டிருக்கவில்லை. தன்னம்பிக்கையும், உயர்ந்த நோக்கங்களுமே நிறைந்திருந் அந்தச் சூழ்நிலைமையில் என்னுடைய போக்கிற்கு அங்கு இடமே இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டேன். அதுவும் குறிப்பாக 'ஒய்' ஒரு பாடலை மனப்பாடம் செய்து கொள்ள எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கண்டபோது மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப்போனேன். அவளுடைய வாழ்வே அன்பின்மீது மலர்ந்தது. அவள்மீது எனக்கு அளவற்ற நம்பிக்கை பிறந்துவிட்டது. அவளது ஒவ்வொரு கேள்விக்கும் முறையாகப் பதில் சொல்லி விடுவேன்.

மறுநாள் காலை நாங்கள் மீண்டும் எங்கள் பேச்சைத் தொடர்ந்தோம். எனக்கு நேர்ந்த எல்லா நிகழ்ச்சிகளையும் அவளிடம் முழுமையாகக் கூறினேன். என்னுடைய கணவனது பெயரைக் குறிப்பிட்டவுடனே அவளுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவசரமாக என்னிடம் "நிகூயென்வான் ட்ராய்... அந்தப் பெயரா சொன்னாய்? ஓ ! அப்படியானால், மக்நமாராவைக் கிட்டத்தட்டக் கொலை செய்தாரே அவருடைய மனைவியா?" என்று கேட்டாள்.

"ஆமாம்."

"ஓ! இது பெரும் பாக்கியம்தான்" என்று கூவினாள் ஆழமான பரிவோடு என்னை நோக்கினாள். அவளது வீங்கிப்போயிருந்த கரங்களால் என் தோளைத் தழுவிக் கொண்டாள்.

"மக்நமாரா சென்ற வருடம் மேற்கு மண்டலத்தைப் பார்வையிட வந்தபோது மயிரிழையில்தான் உயிர் தப்பினான். அவனுடைய பாதுகாப்பு விமானம் தான் தாக்குண்டது. இந்த வருடமும் மிக நெருக்கடியில் தான் தப்பித்திருக்கிறான். ட்ராய் அந்த அமெரிக்க வெறியனைக் கொல்ல முடியாது போனாலும் கூட, அவன் நடு நடுங்கிக் கொண்டிருப்பான் என்பது உறுதி. சிறைக்குள் யாரோ ஒருவர், வெடிகுண்டுகள் நீண்ட சோதனைக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டாலும் அந்த 'காங்லி'பாலத்தைப் பயன்படுத்த யாரும் அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னார். டான் சன் நட்விமான நிலையத்திலிருந்து ஹெலிகாப்டரில் குடியரசு மருத்துவமனைக்கு மக்நமாரா கொண்டு செல்லப்பட்டானாம். அங்கிருந்து சுற்றி வளைத்துக்கொண்டு அமெரிக்கத் தூதுவராலயத்திற்குப் போனாராம். ட்ராயுடைய நடவடிக்கையினால்தான் அந்த அமெரிக்க வெறியன் எலியைப்போல பொந்துகளுக்குள் போய்க்கொண்டிருக்கிறான்."

ட்ராயுடைய மனைவி 'செல்' நம்பர் நாலில் இருக்கிறார்" என்ற செய்தி கிட்டத்தட்ட சிறைச்சாலை முழுமையும் பரவி விட்டது. என்னுடைய 'செல்'லுக்கு நேர் எதிரில் இருந்த 'செல்'லிலிருந்து ஒரு குரல் ரீங்காரமிட்டு வந்தது.

"சகோதரி ட்ராய் அங்குதான இருக்கிறாரா? மங்கலான நீலநிற ஜாக்கெட்' போட்டிருக்கிறாரே அவர் தானா?"

"ஆமாம் நானேதான்" என்றேன்.

"நன்றாக இருக்கிறாயா? உன்னையும் அடித்தார்களா?" இந்தக் குரல் சற்று வயதான மாதுடைய குரல் போல இருந்தது; அதற்கு நான் "இதுவரை அப்படி ஏதும் நடக்கவில்லை. கேள்வி விசாரணைகள் நடந்திருக்கின்றன. மிரட்டியும் பார்த்தார்கள்" என்றேன்.

"சிறையில் இருக்கும் நாங்கள் ட்ராயைப் பற்றி பல விஷயங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அவரைக் கைது செய்துவரும்போது பார்த்தவர்களும், ஏன் போலீசாரிலே கூட சிலர் அவரது உறுதியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பத்தாயிரக்கணக்காக ராணுவத் துருப்புகள் காவலுக்கு நின்றிருந்தபோதிலும் ஒரு வெடி குண்டையாவது, வைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டாரே! மயிரிழையில்தானே அந்தக் கடற்கொள்ளைக்காரன் தப்பிவிட்டான்...குழந்தை, உனக்கு என்ன வயதாகிறது?"

"இருபது"

"உனக்கு ஏதாவது வேண்டுமா?"

என்ன பதில் சொல்வது என்று தயங்கிக்கொண்டிருந்த போது என்னுடன் இருக்கும் மற்றொரு கைதிப் பெண் "அவள் வரும்போது வெறுங்கையோடுதான் வந்தாள் அவளோடு எதையும் எடுத்துவர அனுமதிக்கப்படவில்லை."

பகல் உணவைக் கைதிகள் பெற்றுக்கொள்வதற்காக 'செல்' கதவுகளைத் திறந்துவிட்டார்கள். இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு எனக்குத் துணிமணிகள், போர்வை விரிப்புகள், கொசுவலை, 'டூத் பிரஷ்' பழங்கள், இன்னும் என்னவெல்லாமோ ஒவ்வொருவரும் கொடுத்தார்கள்.

தொடரும்...

## ஈழ மாணவர்களின் கல்விக் கண்களைத் திறந்த இந்திரா காந்தி சர்வதேச கல்வி நிலையம்

### போதனை

மனிதன் கொடுக்க வேண்டிய தானங்களில் எல்லாம் சிறந்த தானம் கல்வித் தானமே. பணப் பேய்கள், ஊழல் பேர்வழிகள் வாழும் இக்கலிகாலத்தில் இந்த இலவச கல்வியை வழங்கிக் கொண்டிருக்கும் உத்தமர்கள் யார் என்பது என் அங்கலாய்ப்பாகியது. இந்திரா காந்தி சர்வதேச கல்வி நிலையம் என்று அழகான பெயரில் ஈழ விடுதலை இயக்கங்களில் ஒன்றான E.N.D.L.F. ஸ்தாபனத்தினர் தங்கள் உறுப்பினர்கள் சகிதம் கடும் முயற்சியில் இதனை நடத்துவதைக் கண்டு என் கண்களில் நீர் அரும்பியது. மக்களைப் பற்றிய சரியான பார்வையுடன், சரியான நேரத்தில், சரியான சேவையினை செய்து கொண்டிருக்கும் இவர்கள் அங்குள்ள மாணவர்களை தம் சொந்த மருமக்களைப் போல் பராமரிப்பதால் என் இரு குழந்தைகளையும் அப்பாடசாலையில் சேர்த்தேன். வெளிநாடுகளில் படிக்கும் வசதி படைத்தவர்களின் பிள்ளைகளை விட என் பிள்ளைகள் தேர்ச்சி பெற்றமை இப்பாடசாலையின் போதனைச் சிறப்பே. தலைசிறந்த கல்விமான்களை உருவாக்கவென ENDLF ஸ்தாபனம் எடுத்திருக்கும் இந்தக் கல்வியூட்டு போதனையை ஈழவர் அனைவரும் பாராட்ட வேண்டியதொன்று.

300 மாணவர்களும் ஈழத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்க தகுதிபெறும் போது அகதி முகாமில் உள்ள ஏனைய சிறுவர்கள் இந்நிலை அடைய மாட்டார்களோ என எண்ணி வேதனைப்படுகிறேன். இந்தியாவில் உள்ள 68 அகதி முகாம்களில் உள்ள சிறுவர் சிறுமியருக்காகவே இப்பாடசாலை இயங்கிகொண்டிருப்பதை அறிந்தும் எம்மவர் தம் பிள்ளைகளை அனுப்பாததும் வேதனை அளிக்கிறது. இப்பாடசாலை அபிவிருத்திக்காக இந்திய மத்திய அரசு எவ்வகை உதவியும் செய்யாத வேளையிலும் தடைகளை தாண்டி தலை நிமிர்ந்து சாதனை செய்ததை தெரிந்தும் தெரியாமல் இருக்கும் எம்மவரை எண்ணி வேதனைப் படுகிறேன்.

### பிரார்த்தனை

பேனாவின் வலிமையால் அரசியல் மயப்பட்ட ஆயுதம் ஏந்திய போராளி இயக்கம் என்கடன் பணி செய்து கிடப்பதே என்பதற்கமைய சேவையாற்றும் இவர்கள் வாழவும், இவர்கள் பணி வளரவும் என் பிரார்த்தனைகள் உரித்தாகட்டும். அத்தோடு இப்பணிக்கு இந்தியாவில் வாழும் ஈழத் தமிழ் மக்கள் அனைவரும் தங்கள் ஆதரவினையும் வழங்க வேண்டும் என இரு கரம் கூப்பி கேட்டுக் கொள்கின்றேன்.

— ஈழக்கமலன்

## வாசகர் கண்ணோட்டம்

### சாதனை

கொழும்பில் றோயல் கல்லூரி, யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரி, மட்டக்களப்பில் புனித மிக்கேல் கல்லூரி, திருமலையில் இந்துக் கல்லூரி ஆகியவற்றை விட ''இந்திரா காந்தி சர்வதேச கல்வி நிலையம்'' அரும் பெரும் சாதனையைச் செய்துள்ளது. அஃதாவது ஈழ கொடுந்துயரில் இருந்து தப்பி அகதிகளாக வந்து சேர்ந்தவர்களில் 12 வயது சிறுவன். இச்சிறுவன் ஈழத்தில் இருந்த வேளை பாடசாலைக்கே சென்றதில்லை. ஆரம்பக் கல்வியை ஆறு மாதங்களில் படித்து அதனை அடிப்டையாகக் கொண்டு நான்கு வருடங்களில் 10 வருட படிப்பினை படித்து இந்திய கல்வி திணைகள S.S.L.C. பரீட்சையில் அதிக மதிப்பெண் பெற்று இன்று கல்லூரி படிப்பை (உயர்நிலை) தொடர் கிறான் என்றால் இக்கல்வி நிலையத்தினைப் போல் உலகில் எந்த கல்வி நிலையமும் இவ்வகை சாதனை செய்யவில்லை. மருந்தகம், டாக்டர், உடற்பயிற்சி, நீதிப் போதனைகளுடன் விளங்கும் இப்பள்ளி மாணவர்கள் விடுமுறைக்கு வீடு வந்ததும் இவர்களின் ஒழுக்க நடவடிக்கை ஏனையோரை திகைக்க வைக்கிறது.

### வேதனை

கடந்த சில ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களின் இன்னல் தொடர்ந்து நீடிக்குமானால் எம் சிறார்களின் கல்வி முற்றிலும் பாதிக்கப்பட்டு அறிவற்ற கூட்டமாக செயல்படுமே என்பதை எண்ணி வேதனையே, என்றோ ஓர் நாள் இப் பாடசாலையில் படித்த வர்களான



### முழுமையான இதழ் ஆகட்டும்

'உன் அடிச்சுவட்டில் நானும்' மன்துக்கு உற்சாகம் தருகின்ற தொடர். போராளிகள் ஒவ்வொரு வரும் தோழமையோடும் நெருக்கத்தோடும் இருக்க வேண்டும் என்பதை அழகாக விவரிக்கிறார் ஆசிரியை, இன்றைக்கும் வழிகாட்டக்கூடிய கதை. வெளியிடும் உங்களுக்குப் பாராட்டு. இதுபோலவே நல்ல கவிதைகளையும் கார்ட்டூன் ப்டங்களையும் தொடர்ச்சியாக வெளியிடுங்கள். ஈழ தேசம் முழுமையான இதழாக வெளிவரட்டும். பக்கங்களை அதிகரியுங்கள்.

— வே.சிவசுப்பிரமணியம்
மயிலாடுதுறை



படிப்பகம்

www.padippakam.com



# ஈழத்தமிழர் கோரிக்கை

**ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியினரால் மேன்மை பொருந்திய கவர்னருக்கு கையளித்த மகஜரின் விபரம்:**



ஆயிரக்கணக்கான ஈழத் தமிழ் அப்பாவி மக்களை குண்டுகள் வீசி படுகொலை செய்து நகரங்களையும், கிராமங்களையும் அழித்து வருகிறது இலங்கைப் படைகள். இந்தியா தலையிட்டு இந்த படுகொலைகளை நிறுத்த வேண்டுமென ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி பணிவோடு கேட்டுக் கொள்கிறது.

இலங்கை அரசு பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை எடுப்பது உண்மையானால், ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கை யானது, இனப் பிரச்சினைக்கு இராணுவ தீர்வையே இலங்கை அரசு முன் வைத்திருப்பது தெளிவாகிறது.

ஈழத் தமிழனத்தை முற்றாக அழிக்கும் பயங்கர நடவடிக்கையை இலங்கை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே 50,000 தமிழர்கள் உயிர் இழந்துள்ளனர். ஐந்து இலட்சம் பேர் அகதிகளாக பல நாடுகளில் உள்ளனர். மேலும் ஐந்து இலட்சம் பேர் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள பௌத்த மேலாதிக்க கொள்கையுடைய இலங்கை அரசுகள் தொடர்ந்து இழைக்கும் இன்னல்களை தமிழ் மக்கள் அனுபவித்து வருகிறார்கள். இலங்கை அரசுகளின் வழமையான பயங்கரவாதத்துக்கு பலி ஆகாமல் உரிமையுடன் வாழ்வதற்கு தமிழ் மக்கள் போராடி வந்தனர்.

இனப் பிரச்சினைக்கு இன அழிப்பே தீர்வாக கொண்டுள்ள சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளை இந்தியாவுக்கும் உலகத்துக்கும் தெரிவிப்பது முக்கியமானதாகும்.

## இலங்கையின் முன்னோர்கள்

ஒழுக்க கேட்டிற்காக தந்தையால் நாடு கடத்தப்பட்டவன்தான் விஜயன். கி.மு. 500ம் ஆண்டில் 700 ஆதரவாளர்களுடன் இலங்கைக்கு வந்து சேர்ந்தான் விஜயன். இவனே சிங்கள இனத்தை தோற்றுவித்தவன். விஜயனின் வருகைக்கு முன்னரே இத்தீவில் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். விஜயன் இலங்கைத் தீவில் காலடி எடுத்து வைக்கும் பொழுது முன்னேசுவரம், திருக்கேதீச்சரம், திருகோணேச்சரம், மாமாங்கேசுவரம் போன்ற இலிங்க வழிபாட்டிடங்களும், கதிர்காமத்தில் முருகன் கோயிலிலும் இருந்தன. கி.மு. 101 ஆண்டில் மன்னன் எல்லாளன் இளவரசன் துட்டகைமுனுவால் தோற்கடிக்கப்படும் வரை அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு இலங்கை தீவில் தமிழ் இராச்சியம் விளங்கியது. இரண்டாயிரம் ஆண்டு காலமாக தமிழரும் சிங்களவர்களும் தனித்தனி இனங்களாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். சில குறுகிய காலங்களில் மட்டும் ஏதோ ஒரு பக்க ஆட்சி இலங்கை முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டது.

## இராச்சியங்கள்

தெற்கையும் மேற்கையும் கொண்ட கோட்டை இராச்சியம், மத்திய மலைநாடுகளைக் கொண்ட கண்டி இராச்சியம், வடக்கையும், கிழக்கையும் கொண்ட தமிழ் இராச்சியம், ஆகிய மூன்று தன்னாதிக்க இராச்சியங்கள் இலங்கையில் நிலவியது. போர்த்துக்கேயரும் (1505-1658) ஒல்லாந்தரும் (1658-1796) கோட்டை இராச்சியத்தையும் தமிழ் இராச்சியத்தையும் கைப்பற்றிய பொழுதும் தனித்தனி இராச்சியங்களாகவே ஆட்சி செய்தனர். 1833ம் ஆண்டு கோல்புரூக் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் நிர்வாக வசதிக்காக பிரித்தானியர்கள் மூன்று இராச்சியத்தையும், ஒருங்கிணைத்தனர். இனம், மொழி, சமயம், கலாச்சாரம், பிரதேசம் என்பவற்றால் தமிழரும் சிங்களவர்களும் வேறுபட்டவர்கள். ஆதலால் பிரித்தானியரால் திணிக்கப்பட்ட கட்டாய போலியான ஒருங்கிணைப்ப சிங்களவர்களின் மேலாதிக்கம் தொடர்ந்து நீடிப்பதற்கு காரணமாக இருக்க முடியாது, அதனால் மனித உரிமை சாசனத்தின்படி தமிழர்கள் தனிநாடு அமைத்துக் கொள்வதற்கு தகுதி உடையவர்களாவர்.

## தமிழர்கள் மீதான ஒடுக்குமுறை

ஆரம்ப காலத்திலிருந்தே தமிழரை ஒடுக்குவதற்கான இரகசிய திட்டத்தை சிங்களவர்கள் வகுத்தனர். சுதந்திரம் கிடைக்கும் முன்னரே 1935ம் ஆண்டு ''தனி சிங்கள மந்திரிசபை'' அமைத்து தமிழரை ஒதுக்கினர். 1948ம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய பிரிட்டிஷார் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே இணக்கமும் ஒத்துழைப்பும் ஏற்படும் வகையில் அரசியல் சாசனத்தை உருவாக்காமல் விட்டுச் சென்றனர். இலங்கையின் முதல் மந்திரிசபை முதல் பிரதமரான டி.எஸ்.செனநாயக்கா ஆட்சிக்கு வந்ததும் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான 10 இலட்சம் இந்தியத் தமிழர்களின் குடியுரிமையும் வாக்குரிமையையும் பறித்தார். ''இன்று இந்திய தமிழருக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மொழிப் பிரச்சனை ஏற்படும்போது இலங்கை தமிழருக்கும் இதே நிலை ஏற்படும் என்று தீர்க்க தரிசனத்தோடு அன்றே எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கூறினார்.

இன்றைய ஜனாதிபதியான சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா தலைமையிலான சிறி லங்கா சுதந்திர கட்சி அரசு 1956ல் ''சிங்களம் மட்டும்'' சட்டம் நிறைவேற்றி தமிழர்களின் மொழி உரிமையை மறுத்தது. இதனை எதிர்த்து சாத்வீகப் போராட்டம் நடத்திய தமிழர்கள் மீது பொலிசாரும் குண்டர்களும் வன்முறையை பிரயோகித்தனர். இதனால் செல்வ நாயகத்தின் தலைமையிலான தமிழரசுக் கட்சி சம உரிமைக் கோரி ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொண்டனர். இதன் விளைவாக பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

## சிங்களவர்களின் துரோகத்தனம்

செய்து கொண்ட ஒப்பந்தத்தில் தமிழ் மொழி தேசிய மொழிகளில் ஒன்றாம் வடக்கு கிழக்கு மாகாணத்தின் நிர்வாக மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து - ஐக்கிய தேசிய கட்சித் தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்தனா பல பௌத்த சங்கங்கள்ள ஒன்று திரட்டி கண்டிக்கு பாதயாத்திரை சென்றார். இதன் விளைவாக பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை உடனடியாக கிழித்தெறிந்தார்.

டட்லி செனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 1963 ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றது. அறுதிப் பெரும்பான்மைக்காக தமிழர்களின் ஆதரவு நாடி செல்வநாயகத்துடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

1. வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகமும், அதன் பதிவு ஏடுகளும் தமிழ் மொழியில் இருக்கும்.
2. இந்த மாகாணங்களின் நீதிமன்றங்களிலும் அதன் பதிவுகளும் தமிழில் நடைபெறும்.
3. மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந் தளிக்கப்படும்.
4. தமிழ் மாகாணங்களில் சிங்கள குடியேற்றங்கள் நியாயமான முறையில் கட்டுப்படுத்தப்படும்.

இந்த ஒப்பந்தத்தை சிங்கள மக்கள் மீண்டும் எதிர்த்தனர். டட்லி செனநாயக்கா இதிலிருந்து பின் வாங்கிக் கொண்டார்.

1970ம் ஆண்டு தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் தாய் சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தார். அவர் 1971ம் ஆண்டு கொண்டு வந்த ''தரப்படுத்தல்'' சட்டத்தின் மூலம் தமிழர்களின் கல்வி உரிமையைப் பறித்தார். (பல்கலை நுழைவிற்கு சிங்கள மாணவர்களை விட அதிக புள்ளிகள் எடுக்க வேண்டும்.)

1972ல் புதிய குடியரசின் அரசியல் சாசனம் உருவாக்கப்படும்போது தமிழர்களின் கோரிக்கையான சமஷ்டி ஆட்சி முறையை நிராகரித்ததோடு, அரசியல் சாசனத்தில் சிறுபான்மை தமிழர்களுக்கு இருந்த சிறு உரிமையையும் அகற்றப்பட்டது. இந்த புதிய அரசியல் சாசனத்தில் பௌத்த மதம் இலங்கையின் தேசிய மதமாக்கப்பட்டதோடு, சட்டங்கள் அனைத்தும் சிங்கள மொழியில் இயற்றப்பட்டும் நீதிமன்ற மொழியாக சிங்களம் இருக்கும் என்றும் இருந்தது. இதன் விளைவாக தமிழர்களின் வேலை வாய்ப்புகள் குறைய ஆரம்பித்தன. இலங்கையின் சனத். தொகையில் 18 விகிதத்தை கொண்டிருக்கும் தமிழர்களுக்கு 1980ம் ஆண்டு 5 விகிதமே அரசு பணிக்கான வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. 1987ல் எந்த வாய்ப்பும் தமிழர்களுக்கு இல்லாமல் போயிற்று.

## தமிழருக்கு எதிரான அட்டூழியங்கள்

தமிழ் விரோதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தலைமையில் ஆன ஐ.தே. கட்சி 1977-ல் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது. 'தமிழருக்கு அமைதி வேண்டுமானால் அமைதி. யுத்தம் வேண்டுமானால் யுத்தம்' என்று உடனடியாகப் பிரகடனப்படுத்தியதோடு தமிழருக்கு எதிரான திட்டமிட்ட பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டார். ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டும், நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டும், கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டும், தீயூட்டவும் பெற்றன. இது முதல் முறையாக தமிழருக்கு எதிராக திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதம் அல்ல. கொலை, கற்பழிப்பு, கொள்ளை, கொடுமைகள் என்பன ஆண்டுதோறும் தமிழருக்கு எதிரான நிகழ்ச்சிகள் ஆயின. 1983-ஆம் ஆண்டின் மிக மோசமான பயங்கரக் கலவரத்தின்போது சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளைக்கூ சிங்களக் குற்றவாளிகளும், சிறைக்

கடந்த கால தவறுகளை கருத்திற் கொண்டு ஈழப் போராட்டத்திற்கான புதிய யுக்திகளை ஈழத் தமிழர்கள் கையாள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



வலர்களும் குரூரமான முறையில் கொலை செய்தனர்.

11, ஜுலை, 1983-ஆம் ஆண்டு 'டெயிலி டெலிகிராப்' பத்திரிகைக்கு ஜெயவர்த்தன கொடுத்த பேட்டியின்போது, ''எனக்கு யாழ்ப்பாண மக்களைப் பற்றிக் கவலை இல்லை. ...ின் உயிர் பற்றியோ, எங்களைப் பற்றிய ஓ...ன் அபிப்பிராயங்கள் பற்றியோ இப்போது ...ந்திக்க முடியாது. உண்மையாகவே அவர்களை நாம் துன்பப்படுத்தினால் சிங்கள மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள்'' என்று குறிப்பிட்டார். உயர் அதிகாரங்களைக் கொண்ட ஒருவரால் விடப்பட்ட இந்த அறிக்கையே சிங்கள மேலாதிக்கத்தை வெட்ட வெளிச்சம் ஆக்குகிறது.

## குடியேற்றங்கள்

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் தமிழர்களின் இன்னொரு பிரச்சனை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 11,000 சதுர மைல் பரப்பளவை கொண்டது தமிழர்களின் பாரம்பரிய வடக்கு / கிழக்கு பிரதேசமாகும். இதில் 3500 சதுர மைல் பரப்பளவை சிங்கள குடியேற்றம் விழுங்கி விட்டது. இன்றுகூட சிங்கள குடியேற்றம் திருட்டுத்தனமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## இந்தியாவுடனான ஒப்பந்தம்

ஜுலை 1983ன் அரச பயங்கரவாதம் இலங்கையின் இனப் பிரச்சனைக்கு இந்தியாவை தலையிட வைத்தது. தமிழரோடு ஒப்பந்தங்கள் செய்வதும் பின்னர் ஏமாற்றுவதும் சிங்களத் தலைவர்களின் வழமையான தந்திரமும், முறையாகவும் இருந்து வந்தது. இலங்கையில் ...மைதி ஏற்படுத்தும் நல்லெண்ணத்துடன் 1987ல் இந்தியா இலங்கையுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. இதன் மூலம் தமிழர்களுக்கு சிறு நிவாரணம் கிடைத்தது. செயலதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆர்.பிரேமதாசா அதிகாரத்துக்கு வந்ததும், புலிகளை தன் கைப்பாவையாக மாற்றி இந்திய இ...ங்கை ஒப்பந்தத்தை அர்த்தமற்றதாக்கினார். இந்திய சம...தானப் படையையும் இலங்கையின் இனப் பிரச்ச...னயில் இந்தியாவின் தலையீட்டையும் திரும்பப் பெ...க் கேட்டுக் கொண்டார். இதன் விளைவாக மீண்டும் பா...காப்பு அற்ற நிலைக்கு ஈழத் தமிழர்கள் தள்ளப்பட்டனர்.

## தொடர்ச்சியான மோசடிகள்

வெற்றிகரமாக இனப் பிரச்சனைக்கு தீர்வு கண்டு ...மைதியை நிலை நாட்டுவேன் என்ற வாக்குறுதிகளோடு ஆட்சிக்கு வந்தார் சந்திரிகா குமாரதுங்கா. ஒரே ஆண்டுக்குள் அவர் அளித்த வாக்குறுதிகளிலிருந்து பின் வாங்கி பாகிஸ்தானிலிருந்து இராணுவ நிபுணர்களின் உதவியையும், சீனா, ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெருந்தொகையான இராணுவ தளவாடங்களையும் நிதியுதவியையும் பெற்று தமிழர்களின் மேல் இனக் கொலைக்கான யுத்தத்தை தொடுத்துள்ளார்.

ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றி இனப் பிரச்சனைக்கான தீர்வொன்றினைக் காண தற்போதைய அரசும் உண்மையாக முயலவில்லை. சில நாடுகள் புலிகளை பயங்கரவாதிகளாக கண்டித்துள்ளன. இதனை சாதகமாக பயன்படுத்தி பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் குண்டுகள் வீசி தமிழினத்தையே அழித்து வருகிறது.

பௌத்த குருமார்களாலும் சிங்கள மேலாதிக்க வாதிகளாலும் எழுப்பப்பட்ட எதிர்ப்புகளுக்கு அடிப்பணிந்து சந்திரிகா குமாரதுங்கா தான் அறிவித்த அரசியல் தீர்விலிருந்து பின் வாங்கத் தொடங்கி விட்டார்.

## முடிவுரை

இலங்கையில் நிலைமை மோசமாவதற்கு முன்னர் ஈழத் தமிழர்களின் பாதுகாவலரும், பொறுப்பாளரும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மறுதரப்பு ஒப்பந்ததாரருமான இந்தியா தலையிட்டு ஈழத் தமிழ் மக்களை இலங்கை அரசு வடிவத்தில் உள்ள பெரும்பான்மை இனவெறியர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும். தமிழர்களின் தாயகத்தை அவர்களுக்கு கிடைக்கும் வகையில் வகை செய்ய 1987-90ல் இந்தியா தவறிவிட்டது. அதனை இப்போது ஏற்படுத்தி கொடுத்து முழுத் தென்னாசியப் பகுதிக்கும் அமைதியான நிலைமை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

இவ்வண்ணம்

**ஞா.ஞானசேகரன்**

பொதுச்செயலாளர்

**ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (E.N.D.L.F.)**

# கேளுங்கள்...



**கே: சந்திரிகா அறிவித்துள்ள இனப் பிரச்சனைக்கான தீர்வினை பல நாடுகள் வரவேற்றுள்ளன. அதனை நடைமுறைப் படுத்தினால் ஈழக் கோரிக்கை கைவிடப்படுமா?**

**ச.முருகானந்தம்**
**சின்னக்காஞ்சிபுரம்**

பதில்: ஈழத் தமிழ் மக்கள் தனி ஈழம் கோரிக்கையை எழுந்தமானமாக முன் வைக்கவில்லை, தனி ஈழம் கேட்கும் நிலைக்கு சிங்கள அரசால் தள்ளப்பட்டனர்: பிரிட்டிஷார் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கியபோது ஜின்னா பாகிஸ்தானை பிரித்துக் கொண்டார். இலங்கையில் தமிழர்கள் ஈழத்தைக் கோராமல் சிங்களவர்களை நம்பி ஐக்கிய இலங்கைக்குள் வாழ சம்மதித்தனர். ஆனால் சிங்களவர்களோ நம்பிக்கை துரோகம் செய்து விட்டனர். பண்டார நாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் போன்று தமிழ் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் மட்டுமல்ல, இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கூட உதாசீனப்படுத்தி ஏமாற்றினர். தீர்வொன்றினை அறிவித்திருப்பது மீண்டும் ஏமாற்றவே. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எப்படி அமல் படுத்தினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். இன்று சந்திரிகா மேற்கொண்டிருக்கும் இன அழிப்பு நடவடிக்கையை திசை திருப்பவும் உலக நாடுகளை கவரவுமே தீர்வொன்றினை அறிவித்துள்ளார். ஆரம்பத்தில் ஈழத் தமிழர்களை ஏமாற்றினார்கள். பின் இந்தியாவை ஏமாற்றினார்கள். இனி உலகத்தை ஏமாற்றப் போகிறார்கள். ஆனால் ஈழத் தமிழ் மக்கள் இனிமேல் ஏமாறப் போவதில்லை.. ஈழத் தமிழ் மக்களின் இனப் பிரச்சனைக்கு தனி ஈழமே தீர்வாகும்.

**கே: புலிகள் பின் வாங்கி காட்டுக்குள் போன நிலையில் ஈழ தமிழ் மக்களை காப்பாற்ற, தனிஈழம் கொள்கையுடைய ஈ.என்.டி.எல்.எப் ஏன் களத்தில் இறங்கக் கூடாது?**

**இ.மார்க்கண்டு**
**கும்மிடிப்பூண்டி**

பதில்: இன்று ஈழம் உள்ள நிலையில் களத்தில் இறக்குவதற்கு ஈ.என்.டி.எல்.எப் தயாராகவே உள்ளது. ஆனால் இரு எதிரிகளை ஒரே நேரத்தில் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதனால் தாமதப்படுகிறது. ஈழம் சுடுகாடானாலும் பரவாயில்லை வேறு இயக்கம் ஈழத்துக்காக போராடக் கூடாது என்ற கொள்கை உடையவர்கள் புலிகள். இப்போது ஈ.என்.டி.எல்.எப் களத்தில் இறங்கினால், சிங்கள இராணுவத்தை தாக்கி வரும் புலிகள் அதனை நிறுத்தி விட்டு, ஈ.என்.டி.எல்.எப்க்கு எதிராக தாக்குதலை மேற்கொள்வர். இதற்காக சிங்கள இராணுவத்துடன் புலிகள் கூட்டு சேர்ந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. 1987ல் தமிழர்களின் எதிரியான சிங்கள அரசுடன் புலிகள் கூட்டு சேர்ந்து இதற்குச் சான்று. வீரமும் தீரமும் மிக்க தமிழ்ப் போராளிகளின் உயிர்களை வெறும் தலைமைப் பதவிக்காக பலியிடவோ அல்லது பலி எடுக்கவோ ஈ.என்.டி.எல்.எப். விரும்பவில்லை. நிலைமைகளை கவனித்து வரும் ஈ.என்.டி.எல்.எப் தக்க சமயத்தில் நிச்சயமாக களத்தில் இறங்கும்.

**கே: ஈழப் போராட்டம் இன்று மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது ஏன். இனிமேல் தமிழீழம் சாத்தியப் படுமா.**

**ஜோ.அன்ரனி**
**மதுரை.**

பதில்: ஈழத் தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் சம உரிமைகளுடன் வாழவே விரும்பினர். ஆனால் சிங்கள மக்களோ அவர்களை இரண்டாந்தர பிரஜைகளாகவே வைத்திருக்க முற்பட்டனர். அதனால் அவர்களிடமிருந்து பிரிந்து வாழ தமிழ் மக்கள் தீர்மானித்தனர். ஈழக் கோரிக்கையை முன் வைத்து சாத்வீகப் போராட்டத்தை மேற்கொண்டபோது சிங்கள அரசு இராணுவத்தை ஏவி விட்டு தமிழ் மக்களை படுகொலை செய்தது. ஈழத் தமிழ் மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ள ஆயுதம் ஏந்துவதை தவிர வேறு வழி இருக்கவில்லை.

முதலில் சிறு சிறு ஆயுத குழுக்கள் தோன்றின. விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்கப் பட்டவர்களை முதலில் என்ன குழு அணுகியதோ அந்த குழுவுடன் தங்களை இணைத்துக் கொண்டனர். குழுக்கள் பாரிய இயக்கமாக வளர்ச்சியடைந்த போது தலைமை பதவிக்கு போட்டிகளும் ஏற்பட்டதன் விளைவாக அமைப்புக்குள் பின் உட்கொலைகள் நடக்கத் தொடங்கின. இதுவே காலப் போக்கில் தலைமைக்காக ஒரு இயக்கம் மற்ற சகோதர இயக்கங்களை அழிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது. ஈழ விடுதலைக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட ஆயிரக்கணக்கான போராளிகளை இன்னொரு இயக்கம் படுகொலை செய்ததை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, இயக்கங்கள் மீது வெறுப்புற்றனர். தட்டிக் கேட்டவர்களையும் படுகொல செய்ததினால் மக்கள் சுதந்திரமாக கருத்து தெரிவிப்பதையும் நிறுத்திக் கொண்டனர். தமிழீழத்தின் மீது இருந்த ஆர்வமும் குறையத் தொடங்கியது. சிங்கள இராணுவம் கொலை செய்த போராளிகளை விட புலிகள் கொலை செய்த போராளிகள் தான் அதிகம். இயக்க மோதல்கள் இல்லாமல் இருந்திருந்தால் என்றோ தமிழீழம் மலர்ந்திருக்கும். துப்பாக்கிகள் மக்களை காப்பாற்றவே என்ற நிலை மாறி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆயுதமாகிறது. எந்த மண்ணின் விடுதலைக்காக போராட முன் வந்தார்களோ அந்த மண்ணிலிருந்து போராளிகள் விரட்டியடிக்கப்பட்டனர். இதனால் எதிரியின் பாசறைக்குள் சில போராளிகள் தள்ளப்பட்டனர்.

சிங்கள அரசும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆயுதம், பணம், வீடு, வாகனம், அத்துடன் பதவி என்றதும் ஆட்சியாளருடன் ஒட்டிக் கொண்டு துரோகிகளாயினர். அரசுக்கு ஆலோசகர்களுமாயினர்.

சர்வாதிகாரம் வெற்றியடைந்ததாகவோ, நிலைத்ததாகவோ சரித்திரம் கிடையாது. ஆரம்பத்தில் கையோங்கி இருந்தாலும் நெடுங்காலத்துக்கு நிலைக்காது. ஆபத்தான நிலை ஏற்படும்போது யாருமே உதவிட முன்வர மாட்டார்கள். இன்று ஈழத்தில் நடப்பதும் அதுதான். ஈழத் தமிழ் மக்கள் பயங்கரவாதத்தை வெறுக்கிறார்களே தவிர தனி ஈழத்தை அல்ல. கடந்த கால தவறுகளால் ஈழப் போராட்டம் தொய்வு நிலையை அடைந்து பல வருடங்களுக்குப் பின் தள்ளப்பட்டு விட்டது. இதற்காக மனம் தளர வேண்டாம் அன்பரே. மிகப் பெரிய வல்லரசான அமெரிக்காவை எதிர்த்து வியட்நாம் வெற்றிப் பெற முடியுமானால், பிரிட்டன் ஆதரவு ஆட்சியாளர்களை எதிர்த்து தென் ஆப்ரிக்கா விடுதலை பெற முடியுமானால், ஈழத் தமிழர்கள் இவர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல. கடந்த கால தவறுகளை சீர்தூக்கி பார்த்து ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து, மக்களின் விமர்சனங்களுக்கு மதிப்பு கொடுத்து சரியான பாதையில் போராட்டத்தை வழி நடத்தி இயக்கங்களுக்கா அல்ல மக்களுக்காகவே நாடு என்ற கொள்கை முன்னெடுக்கப் படும்போது ஈழம் சாத்தியமாகும்.

**கே: கொழும்பில் சில தலைவர்களை காணவில்லையாமே?**

**கவிதா பிரதீபா**
**திருச்சி**

பதில்: யாரைக் கேட்கிறீர்கள். யாரையும் சந்திக்காமல் பலத்த பாதுகாப்புடன் மாளிகைக்குள் மறைந்திருக்கும் சந்திரிகாவை கேட்கிறீர்களா. அல்லது தன் செயலகத்தில் நடந்த தாக்குதலுக்குப் பின் அமெரிக்கா, லண்டன் என்று பாதுகாப்புத் தேடி சுற்றுப்பயணம் சென்றுள்ள எதிர்கால யாழ்ப்பாண முதல மைச்சர் டக்ளஸ் தேவானந்தேயைக் கேட்கிறீர்களா. குறிப்பிட்டு கேட்டால் சரியான பதில் சொல்ல முடியும்.

கேளுங்கள்.. பகுதிக்கு வாசகர்களிடமிருந்து தரமான கேள்விகள் எதிர்பார்க்கப் படுகிறன.

**ஆசிரியர்,**
**ஈழ தேசம்,**
6/7, பூர்ணிமா அபார்ட்மென்ட்ஸ்,
2வது பிரதான சாலை,
யுனைட்டெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம், சென்னை-24.

பதவிக்காகவும் சுகபோகத்துக்காகவும் செயல்படும் துரோகிகளை ஈழத் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்.

படிப்பகம்

# எமது குரல்

## ஆதரவற்ற தமிழினம்

இனங்களுக்குள் மோதல்கள் பல நாடுகளில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ஈழத்தில் நடைபெறுவது இனங்களுக்கான மோதல்கள் அல்ல. சிறுபான்மை இனத்தை அரசும் அரசின் முப்படைகளும் சேர்ந்து அழிக்கும் நடவடிக்கையே இங்கு நடைபெறுகிறது.

இவ்விதம் ஓர் இன அழிப்பு யுத்தத்தினை இலங்கை அரசு மேற்கொண்டு வருவது உலகின் கண் முன் கொண்டு வரப்பட்டுள்ளது. இருந்தும் சிங்கள அரசு கவலை கொள்ளவில்லை. அறிந்து கொண்ட உலக நாடுகளும் பெரிதாக அலட்டிக் கொள்ளவுமில்லை. எதனால்? ஏன்? தமிழ் மக்கள் இதுபற்றிச் சிந்தித்தார்களா? இல்லை! அவர்கள் இன்னமும் திருப்பிப் பார்க்கவில்லை.

உலக நாடுகள் (ஏன் இந்தியாவும் கூட) வாய் திறக்காததற்குக் காரணங்கள் பலவுண்டு.

இன்று புலிகளின் பெயரைச் சொல்லி தமிழரினம் அழிக்கப்படுகிறது என்ன சொல்லி ''ஈவிரக்கமற்ற பயங்கரவாதிகள்'' என்று சொல்லி எங்கள் இனத்தையே அழிக்கும் போது உலகம் மௌனமாகி நிற்கிறது. உண்மை. ஆமாம் இது உண்மைதான். சிங்கள இராணுவம் படுகொலை செய்த ஈழத் தமிழர்களை விட, விடுதலைப் புலிகள் படுகொலை செய்த தமிழர்களின் எண்ணிக்கைதான் அதிகம் என்பது உண்மைதான்.

சிங்கள இராணுவம் படுகொலை செய்த ஈழத் தலைவர்களை விட விடுதலைப் புலிகள் படுகொலை செய்த ஈழத் தலைவர்கள்தான் மிக அதிகம் என்பதும் உண்மைதான்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் தலைவரைப் படுகொலை செய்ததும் இதே புலிகள்தான் என்பதும் உண்மைதான்.

புலிகளுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும்தான் தமிழீழம் என்பது இவர்களது கொள்கை என்பதையும் உலகம் அறிந்துதான் இன்று - ஊமையாகியுள்ளது! புலிகளும் அவர்களது ஆதரவாளர்களும் தவிர ஏனையோர் இறந்து விட வேண்டும் என்ற கொள்கை ஓர் நாட்டின் விடுதலைப் போர் ஆகுமா? விடுதலை அனைத்து மக்களுக்குமாக அமைய வேண்டும். அல்லது சமுதாய, பொருளாதார கொள்கைகளுக்காக அமைய வேண்டும், அப்படி எதுவுமில்லாமல், தன்னை ஆதரிக்காதவர்களை கொன்றொழிப்பது விடுதலைப் போராகாது. தான் மட்டும் வாழ வேண்டும் அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற சுய நலமே தவிர இது வேறில்லை.

இயக்கங்களை அழித்தொழிப்பதும் அவற்றினை விரட்டி அடிப்பதுமே விடுதலைப் போர் என்று எண்ணிய மக்கள் எம்மவரில் நிறையவே இருக்கின்றனர். நாங்கள் இலங்கையில் சிறுபான்மை இனம் என்பதை புலிகள் மட்டுமல்ல எங்கள் மக்களும் மறந்து விட்டனர். உலகின் நான்காவது பெரிய இராணுவத்தினை அடித்து விரட்டியவர்கள் என்று வீரம் வேறு பேசப்பட்டது. அப்படியாயின் உலகின் நாற்பத்தியொன்பதாவது இடத்தில் இருக்கும் இலங்கை இராணுவத்தினை ஏன் விரட்டி அடிக்க முடியவில்லை? உண்மை இதுவல்ல. அன்றைய இலங்கையின் ஜனாதிபதி இந்திய அமைதிப் படையை வெளியேறும்படி கேட்டுக் கொண்டதால்தான் அமைதிப்படை வெளியேறியது என்பதுவே உண்மை.

இன்று நடைபெறும் இன அழிப்பு நடவடிக்கையை எதிர்த்து உலகில் வாழும் அனைத்துத் தமிழர்களும் ஊர்வலம் நடாத்தியும் சண்டனம் தெரிவித்தும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியுமுள்ளனர். இந்த மக்கள் எதனை எதிர்பார்க்கின்றனர்? உலகின் அனுதாபத்தினை! உலகின் அனுதாபத்தினை பெற்றுக் கொள்ள நாங்கள் தகுதியானவர்களா? என்பதினை எம்மவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை.

ஒரு முனையில் சிங்கள இராணுவம், மறுமுனையில் புலிகள். இந்தப் புலிகள் அனுதாபத்திற்குரியவர்களா - என்றால், கிடையவே கிடையாது என்று உலகத்தவர் கூறுவர். ஆனால் எம்மவர் மறைக்கின்றனர். உண்மை பேசப் பயப்படுகின்றனர். இன்று யார் மூலம் அனுதாபம் தேட முற்பட்டுள்ளனர். மக்கள் அழிகின்றனர் என்பதைக் காரணம் காட்டித்தான் இன்று தமிழ்நாடும் கர்த்தால் கடைப்பிடித்தது. எனவே மக்களுக்காகத்தான் அனுதாபமோ உதவியோ கிடைக்குமே அல்லாது படுகொலைகளுக்காகவோ வீரச் செயல்களுக்காகவோ அல்ல.

நாம் ஏன் ஈழம் கோரினோம்? இலங்கை அரசு நிலத்தைப் பறிக்கிறது, மொழியைப் பறிக்கிறது, தொழிலைப் பறிக்கிறது, கல்வியைப் பறிக்கிறது, மத உரிமையைப் பறிக்கிறது என்று தான் ஈழம் கோரிப் போராட முற்பட்டோம். ஆனால் இதனையே கோரிய இயக்கம் தமிழர்களின் உயிரையே பறித்ததல்லவா! தமிழ்த் தலைவர்களைக் கொன்றொழித்ததல்லவா! கொன்றொழித்தவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் யானைச் சோடா கொடுக்கப்பட்டதல்லவா!

எங்கள் போராட்டம் சிதைவுற இவையே காரணமாக அமைந்தது. இன்று இலங்கை அரசுக்கு ஆலோசகர்களாகவும் ஆதரவாளர்களாகவும் பல தமிழ்க் கட்சிகள் செயல்படுகின்றன. துரோகிகளாக மாறியுள்ள டக்ளஸ் தேவானந்தா, -சித்தார்த்தன் போன்றோருடன் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சேர்ந்து அரசுப் படைகள் எப்படிச் செயல்பட வேண்டும் என்று ஆலோசனை கூறும் அளவுக்கு துரோகிகளாகி விட்டனர். வடமராச்சி சாகவச்சேரிப் பகுதியில் குண்டு போட வேண்டாம் என்று அரசுக்கு ஆலோசனை கூறினார் சிவசிதம்பரம். அப்படியாயின் ஏனைய பகுதிகளில் குண்டு போடுங்கள் என்று கூறப்படுகிறது. ஏன் மூன்றாண்டுகளுக்கு முன்னர் இவரைச் சந்தித்த முக்கிய பிரமுகர் ஒருவரிடம் ''ஐயோ என்னை விட்டுவிடுங்கள். விடுதலை + அரசியல் இதுவெல்லாம் எனக்கு வேண்டவே வேண்டாம்'' எனப் புலம்பியவர் - சிவசிதம்பரம். பதவியாசை யாரை விட்டது!

இதுபற்றி விசாரித்ததில், நாங்கள் மட்டுந்தான் சிங்கள அரசுடன் உறவு கொண்டுள்ளோமா? புலிகளும் பிரேமதாசாவிடம் ஆயுதம் வாங்கினர்; பணம் வாங்கினர், கெலிகப்டர் போக்குவரத்துப் பெற்றனர். சிங்கள ராணுவத்துடன் சேர்ந்து வந்து ஏனைய இயக்கங்களைத் தாக்கினர். இவை அனைத்தையும் புலிகள் மறுக்கட்டும் பார்க்கலாம் என்று மார் தட்டிக் கேட்டனர். எங்களை மட்டும் துரோகிகள் என்று கூறுகிறீர்கள் புலிகள் துரோகிகள் இல்லையா? என்றனர்.

துரோகத்தனத்தை நியாயப்படுத்த புலிகள் கொள்கையில் இருந்த துரோகத்தனம் காரணமாகக் காட்டப்படுகிறது. உண்மைதான் இவர்களும் இதனைச் செய்தவர்கள் தானே! சிங்கள அரசுக்குத் துணை போனதன் விளைவை புலிகள் விரைவிலேயே கண்டு கொண்டனர். அன்று இவர்கள் செய்ததும் துரோகத்தனம் தான் இதனை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இலட்சக்கணக்கான எங்கள் மக்கள் அகதிகளாக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டு அனாதைகளாகக்கப்பட்டுள்ள வேளையிலும் மேற்கொண்டு தேவாநாந்தாக்கள் சிங்கள அரசுக்கு ஆலோசனை வழங்குவது படு பயங்கரத் துரோகத்தனம். விடுதலை என்ற சொல்லுக்குள் நுழைந்து கொண்ட அரசியல் வியாபாரிகள் இவர்கள். வசதி மற்றும் பணத்துக்காக தமிழ் இனத்தை விற்பனை செய்யும் இவர்கள் தமிழினத்திலிருந்து தூர வைக்கப்பட வேண்டியவர்கள்.

எங்கள் இனத்தின் விடுதலைப் போர் தொய்வு பெற்றுவிடக் கூடாது. ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலம் விடுதலையை வென்றெடுக்கலாம். அவரவர் தங்கள் கொள்கைகளை மீளாய்வு செய்ய வேண்டும். மக்கள் இதில் பங்கு கொள்ள வேண்டும். பல தவறுகளுக்கு எங்கள் மக்களும் துணை சென்றுள்ளனர். விமர்சனங்களை நிராகரித்தால் சர்வாதிகாரத்திற்கு வழி வகுக்கும். இன்று தவறுகளைக் களையாதவர்கள் பின்னர் திருந்தி வரும்போது காலம் கடந்துவிடும்.

சர்வதேச அளவில் ஓர் அமைப்பினை ஏற்படுத்த தமிழர்கள் முன்வர வேண்டும். அது ஈழ மக்களுக்கான விடுதலைக் கூட்டமைப்பாக அமைய வேண்டும். படுகொலைகள், பயங்கரவாதம் கைவிடப்பட வேண்டும். விடுதலைப் போர் புனிதமானது! அது மக்களுக்காக என்று இருக்கும் வரைதான்!

தனக்கும் தன்னுடைய ஆதரவாளர்களுக்கும்தான் என்றால் அதற்குப் பெயர் விடுதலைப் போர் அல்ல. வெறும் சண்டித்தனம்! நம்மவர் திருந்த வேண்டும் அதுவும் மேலோட்டமாகவில்லை! ஒட்டுமொத்தமாகவே! ஆதரவற்ற தமிழினம் ஒன்றுபட்டாலே போதும், வேறு ஆதரவு எதற்கு! இது நடக்குமா. அல்லது தொடர்ந்து கொம்பு சீவப்படுமா?

---

தமிழ் இனத்தை மேற்கொண்டு எப்படி ''ஏமாற்றலாம்'' என்று சிங்கள அரசுக்கு ஆலோசனை கூறும் தமிழ்ப் புத்த பிரானின் நாடாளுமன்ற அறிவுரையைக் கீழே காண்க.

## 'விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தொழில்பேட்டைகள் நிறுவுங்கள்'

**—சித்தார்த்தன்**

*புதன் கிழமை 29.11.1995*

வட-கிழக்கு விடுவிக்கப்பட்ட பகுதிகளிலாவது கைத்தொழில் பேட்டைகளை நிறுவி தமிழ் மக்கள் மனங்களில் நம்பிக்கையை ஊட்டுங்கள் என்று வன்னி மாவட்ட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி எம்.பி. த.சித்தார்த்தன் நேற்று சபையில் கோரிக்கை விடுத்தார்.

கைத்தொழில் அபிவிருத்தித்துறை அமைச்சின் வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட-கிழக்கிலிருந்து கைத்தொழில் துறை பற்றிப் பேசுவதற்கு எமக்கு எதுவுமேயில்லை. அங்கு யுத்த நிலைமை உள்ளது. வட-கிழக்கில் இந்த யுத்தம் விஸ்வரூபம் எடுத்தமைக்கு அப்பகுதி புறக்கணிக்கப்பட்டமையே காரணமாகும்.

காங்கேசன்துறை, பரந்தன் தொழிற்சாலைகள் எதுவும் இயங்கவில்லை. எந்தத் தொழிற்சாலைகளும் அங்கு இல்லை. அப்பகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையே இந்தப் பிரச்னை உக்கிரமடைந்ததற்கு காரணமாகும்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளிலாவது சிறு சிறு கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் தமிழ் மக்களையும் அரசு கவனிக்கிறது என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் ஏற்படுத்தலாம்.

திருமலையில் சுதந்திர வர்த்தகவலயம் திறக்கப்படவில்லை. தொழிற்சாலைகள், தொழிற்பேட்டைகள் என்றால் குடியேற்றத் திட்டங்களோ? என்ற அச்சம் தமழ் மக்கள் மனதில் இன்றும் இருக்கிறது எனவே கைத் தொழில் பேட்டைகளை நிறுவும் போது தொழில் வாய்ப்பில் அந்தந்த மாவட்ட இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும்.

இன்று அகதிகளாக ஓடும் மக்களுக்கு சிங்கள மக்கள் கூட நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளனர். அவர்களுக்கும் விசேடமாக பிரதி அமைச்சர் பேட்டிலால் திஸாநாயக்காவுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

*நன்றி:- வீரகேசரி.*

---



அடுத்த முதலமைச்சர்
டக்ளஸ் தேவானந்தே!

B.B.C. தமிழோசைக்குப் போன் செய்து அடுத்த முதலமைச்சர் நான் தான் என்றும் நாட்டு மக்களுக்கு அறிவிப்பு ஒன்று கொடுக்க வேண்டும். ஆகவே தனது பேச்சினை ஒலிபரப்பும்படி வழிந்து கோரினார். டக்ளஸ் தேவானந்தே.
முதலமைச்சர் ஆனதும் அறிவியுங்கள் ஒலிபரப்புகின்றோம் என்று கூறி தொலைபேசியைத் துண்டித்துக் கொண்டது பி.பி.சி.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: சி.தயாபரன்,
முகவரி: 6/7, பூர்ணிமா குடியிருப்பு,
இரண்டாவது பிரதான சாலை,
யுனைட்டெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.

ஈழப் போராட்டம் தோல்வியுறவில்லை புலிகளின் தவறான கொள்கையால் பின் தள்ளப்பட்டுள்ளது. புதிய வடிவத்துடன் முன்னெடுத்துச் செல்ல உழைப்போம்.

www.padippakam.com
படிப்பகம்